உ

சிவமயம்.

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி

# ஞானப்பிரகாச முனிவர்.

(வரலாறு)



சென்னை:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1953.

# சிறப்புரை.

தென்பரதகண்டம் சிவனடியார் அறுபத்துமூவரை உடையது. எமது நாடாகிய யாழ்ப்பாணம் சிவனடியார் இருவரை உடையது. இவர்களுட் பிந்தியவராகிய நாவலர் பெருமானுடைய திருச்சரிதை அநேகரால் எழுதப்பட்டது. நாவலர்பெருமானுலே துதிக்கப்பட்டவரும் "பூரணசிவாநுபூதிமான்" என்று சங்கரபண்டிதராலே கணிக்கப்பட்டவருமாகிய ஞானப்பிரகாச முனிவரது திருச்சரிதையையும் யாம் அறிதல் இன்றியமையாததாம். அவருடைய திவ்விய சரித்திரத்தை இப்போது எமக்கு எழுதித்தந்தவர்கள் சைவத்தொண்டையே பொழுது போக்காகக் கொண்ட திருமயிலை ஸ்ரீமத். சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையாவர். இதற்காக எமது வணக்கம் அவர்களுக்கு என்றும் உரியதாம்.

கந்தவனம்
விரோதி பங்குனி 10௨

சு. சிவபாதசுந்தரம்.

# ஞானப்பிரகாச முனிவர்.

இற்றைக்கு 370 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப் பாணத்து நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த திருநெல்வேலி என்னும் கிராமத்தில் ஞானப்பிரகாசர் எனப் பெயரிய ஓர் சைவசிகாமணி இருந்தார். பாண்டிமழவர் குடியில் வந்தவர். பரம்பரைச் சைவவேளாளர். அதிகாரம் செல்வம் கல்வி முதலியவற்றோடு விளங்கியவர். தந்தையார் பெயர் காராள பிள்ளை எனக்கூறுப. நாவலர் பெருமானின் மூதாதையருள் ஒருவரென நாவலர் சரித்திரம் அறிவிக்கின்றது. இவர் காலத்தில் இலங்கையை அரசாட்சி செய்த பறங்கியர் (Portuguese) மதவெறியால் உந்தப்பட்டுப் பல அக்கிரமங் களைப் புரிந்தனர். அவற்றுள் திருக்கோணமலை, நல்லூர் முதலிய இடங்களிலிருந்த சிவாலயங்களையும் அநுராதபுரத்தி லிருந்த பல சிற்ப மாளிகைகளையும் இடித்து ஒழித்தமை எடுத்தியம்பற்பாலது. இஃதன்றி ஒவ்வொரு குடித்தனக் காரனும் முறைபாடாகத் தினமொரு பசுவைத் தங்கள் அதிகாரிக்கு மாமிச உணவிற்காகக் கொடுத்தனுப்ப வேண்டு மென்று கட்டளையிட்டிருந்தனர். அக்கட்டளையின்படி ஞானப்பிரகாசர் முறைவந்தது. அவர் அப்பாவச் செய லுக்குப் பயந்து முறை நாளுக்கு முன் இரவே ஊரைவிட்டுப் புறப்பட்டு வேதாரணியமார்க்கமாக இந்தியாவிற்குச் சென் றனர். பிறகு, அப்பமூர்த்திகள் முத்தியடைந்த திருப்புக லூரைப் புகலிடமாகக்கொண்டு அவ்வூர்மேவிய புண்ணிய மூர்த்தியை முப்பொழுதும் திருமேனி தீண்டிப் பூசிக்கும் தவமுதல்வராயிருந்த பெரிய அண்ணுசாமி சிவாசாரிய ரென்பவரிடம் சிவதீக்ஷை பெற்றுச் சிதம்பரத்தை அடைந் தார். அங்கே ஓருமண்டலகாலம் தேவி உபாசனை புரிந்தார். சிவகாமித்தாயார் திருவருட் பாங்கின்படி, சில நாட்கள்

கழித்து கௌடமெனப்படும் வங்காள தேசத்திற்குச் சென்றார்.

அங்கே வடமொழியிற் பெரும் பாண்டித்தியமுடைய ஓர் பிராமணச் சந்நியாசியைக் கண்டார். அவர் தமது மாணவர்களுக்குத் தினந்தோறும் தர்க்கம், மீமாஞ்சை, வியாகரணம் ஆகிய சாத்திரங்களைப் போதித்துவந்தார். அப்பாடங்களை ஞானப்பிரகாசர் தூரநின்று தவறவிடாமல் அவதானித்து வந்தார். ஆசிரியர் தமது மாணவர்களைப் பரீக்ஷித்தார். அவர்கள் சரியான விடை பகரவில்லை. இவரைப் பிறகு பரீக்ஷித்தார். இவரது விடை ஏற்றதா யிருந்தது. அதை யறிந்த ஆசிரியர் இவரையும் மாணவர் கூட்டத்திற் சேர்த்துக்கொண்டு பல நூல்களைக் கற்பித்தார். இப்படி ஒருவருடம் கழிந்தபின், இவர் பேராற்றலுடையவ ராகக் காணப்பட்டார். இதை யறிந்த ஆசிரியர் இவரைத் தென்னாட்டுக்குத் திரும்பிச் சென்று அங்கே வேண்டிய நூல்களைத் தாமே இயற்றலாமென்று பணித்தார். அவ்வாணை யைச் சிரமேற்கொண்டு தென்னாட்டுக்கு வந்து இப்போது குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்துத் தலைவரை அடுத்து அம்மடத்திற் சந்நியாசம் பெற்றுச் சிவாகமங்களைக் கசடறக் கற்றுணர்ந்தார். அம்மடத்தி லிருந்தபோதே தமிழிற் சிவஞான சித்தியாருக்கு ஓர் சுருக்கமான உரையும், சம்ஸ்கிருதத்தில் பௌஷ்கராகம விருத்தசித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை, பிராசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்தினம், சிவாகமாதிமான்மிய சங்கிரகம், ஓமாத்திரிகற்பம் முதலிய நூல்களும் இயற்றினார்.

பிறகு, சிதம்பரத்திற்கு வந்து அங்கே தங்கியிருந்து சிவகாமசுந்தரி கோயிற் திருப்பணி செய்வாராயினர். பின்பு

தமக்குக் கிடைத்த புதையலைக்கொண்டு ஞானப்பிரகாசம் என்னும் குளத்தைத் தோண்டுவித்தார். அக்குளத்தின் சமீபத்தில் இவர் பெயரால் ஓர் மடமும் உளது. [இவ் விரண்டும் நல்ல நிலையில் இல்லை. இவற்றைச் சீர்ப்படுத்த வேண்டியது எமது கடனாகும்.] இவர் சிதம்பரத்திலேயே தமது அந்திய காலத்தைக் கழிக்கலானார். ஓர் பங்குனி மாசப் பூசத்தில் நிஷ்டைகூடிச் சிவபதமடைந்தார். இவருடைய சமாதி ஞானப்பிரகாசக் குளத்திற்குச் சமீபத்திலுளது.

முனிவர் தமிழில் இயற்றியது சிவஞானசித்தியாருரை ஒன்றே. இது மறைஞானதேசிகர், சிவாக்கிர யோகிகள் ஆகிய இருவரின் உரைகளுக்குப் பிந்தியது. நிரம்ப அழகிய தேசிகர், சிவஞானயோகிகள் உரைகட்கு முந்தியது. இவ்வுரை சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தலென்னும் இலக்கணமுடையது. அதன்கண் காமிகம், வாதுளம், மதங்கம் முதலிய சிவாகமங்களும், தொல்காப்பியம், ஞானாமிர்தம், கோயிற்புராணம் முதலிய தமிழ் நூல்களும் பிரமாணமாகக் காட்டப்பட்டிருப்பதால், இவர் இருமொழிகளிலும் வல்லுநர் என்பது பெறப்படுகின்றது. இவருடைய சித்தியாருரை பின்வருமாறு சிறப்பிக்கப்பட்டுளது:—

சொல்லி னுவிற் றுரிசறுஞ் சோத்திரத்
தொல்லு மேற்சிவ ஞான முதித்திடுஞ்
செல்லு மெய்யரு ணந்திசெய் சித்திக்கு
நல்ல ஞானப்ர காசன விற்றுரை

இவ்வுரையைத் தழுவிக் கொழும்பு - மு. திருவிளங்கம் என்பவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் அரிய விளக்கவுரையைச் சித்தியாருக்கு எழுதி வெளியிட்டார்.

முனிவரின் சித்தியாருரை முதன் முதல் இணுவில் நடராச ஐயரால் 1887 - ல் அச்சிடப்பட்டது. பிறகு சென்னை - சண்முகசுந்தர முதலியாரால் 18—8—89-ல் மற்றைய ஐந்து உரைகளோடு சேர்த்து அச்சிடப்பட்டது. சில ஆண்டுகளின் பிறகு, வதிரி-வித்துவான். சி. தாமோதரம் பிள்ளையால் தனியாகச் சில குறிப்புரையுடன் அச்சிடப் பட்டது. இப்போது இம்மூன்று பதிப்புப் பிரதிகளும் திருவிளங்கத்தேசிகர் உரையும் கிடைப்பதருமை. ஆகவின் முனிவரது சித்தியாருரையைத் தற்காலத்திற்கேற்ற விளக்கக் குறிப்புக்களுடன் அச்சிடவேண்டியது அவசியம். அவரது வடமொழிச் சிவஞானபோத விருத்தியுரையையும் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடுவது நலம். இப்போது யாம் உடனே செய்யத்தக்கது அவரது சித்தியாருரையைக் குறிப் புரையுடன் அச்சிடுவதேயாம். அதுவே அப்பெரியாரது ஞாபகச் சின்னமாக விளங்கும்.

முனிவர் இயற்றிய வடமொழி நூல்களிற் சிவஞான போதவிருத்தி, சித்தாந்தசிகாமணி, சிவயோகரத்னம், சிவ யோகசாரம் ஆகிய நான்கும் 1927-ம் ஆண்டில் முனிவரின் வழித் தோன்றலாகிய த. கைலாச பிள்ளையவர்களால் வெளி யிடப்பட்டன; அவை எம்போன்ற வடமொழிப் பயிற்சி யில்லாதவர்களுக்குப் பயன்படுவதில்லை. சிவகீதையைத் தமிழ் மொழிபெயர்ப்போடு அச்சிட்ட கைலாசபிள்ளையவர்கள் இந்நான்கு நூலையும் தமிழ் மொழிபெயர்ப்போடு அச் சிடாது விட்டது வருந்தத்தக்கது. முனிவரின் சித்தியா ருரையையும் மற்றைய வடமொழி நூல்களையும் நீர்வேலிச் சங்கர பண்டிதர் பெரிதும் போற்றியதாகத் தெரியவருகிறது. முனிவரது சித்தியாருரையை அவர் 'ஞானப்பிரகாசியம்'

என்னும் பெயரோடு அச்சிட எண்ணியிருந்ததாகவும், அவ் வெண்ணம் நிறைவேறும் முன்னர் இறந்துபோனதாகவும் அறியக் கிடக்கின்றது.

முனிவருடைய சீடர் வரணி - தில்லைநாதத் தம்பிரான் என்னும் சிவதொண்டர். இத்தம்பிரானார் பல சிவதொண்டுகளை வேதாரணியத்தில் ஆற்றியுள்ளார். வியாக்கிரபாத புராணம் பாடிய அளவெட்டி - வைத்தியநாத முனிவரும் நமது ஞானப்பிரகாசர் காலத்தவரென்பர். அவரும் தமது பிற்காலத்தைச் சிதம்பரத்திலேயே கழித்தவர்.

ஆசிரியர் ம. க. வேற்பிள்ளையவர்கள் இயற்றிய ஈழ மண்டல சதகத்தில், ஞானப்பிரகாச சுவாமிகள் வரலாறு பின்வருமாறு தொகுத்துக் கூறப்பட்டுள்ளது:—

சீர்மேவி யாழ்ப்பாண திருநெல்வே லியிலியாஞ்
செய்தவ மெனவுதித்தான்
சிந்தும் பழிக்குவெந் துயருழந் தஞ்சிநந்
தேயமக லுஞ்சிந்தையான்
ஏர்மேவு யௌவனத் தெரிகுளிக் குங்கற்பி
னேந்திழையை யுங்கதறவிட்
டெய்திச் சிதம்பரத் திறையிறைவி தாள்புக்கொ
ரேழேழு நாளுபவசித்
தூர்மேவு கௌடத்தெ முமையம்மை யருளுந்த
வுற்றுரியக் கடல்கடந்
தும்பர்குரு வின்மகா பண்டிதனு மாய்ச்சனன்
முற்றபய னுறவுமையருட்
சார்மேவு சைவத் தனித்துறவி யாயினுன்
சாந்தநா யகிசமேத

சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுரதல வாசனே. (1)

ஆயசிவ யோகிபின் றில்லைமா நகுரடைந்
தம்மையப் பரையடிதொழு
தானந்த வெள்ளத் தமிழ்ந்தியக் கினிதிக்
கடைந்தயர் மடாலயத்துட்
போயரிய நிட்டையி லிருக்குநா ளிற்புதையல்
புவியிற் புலப்படுதலும்
புனிதனிஃ தாட்சொல்லி யென்றஞ்சி யாப்பிகோர்டோர்
புரையுட் புதைத்தகறலும்
தூயகோ முட்டியொரு வன்முன் புதைத்தது
துறந்துபோ னுன்மறந்தே
துனைவினே டோடிவந் தனையதங் கின்மையிற்
றுயருழந் தலறினுன்சேர்
தாயகம தாகுமுன் சரணகம லந்தருதி
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. (2)

அழுகுரல் செவிக்கொடங் கையன்வெய் தினினெய்தி
யாற்றியவ லமதறைகென
வாதியந் தஞ்சொல்லு மவனைவா வென்றழைத்
தாப்பியி தகற்றுகெனுமப்
பொழுதவ னகற்றியப் புதையல்கண் டகமகிழ்வு
பொங்கியம் முனிபொன்னடி

போற்றிமு வுலகினின் போலுமுண் டோஞானி
புதையலினி நின்னதேயான்
விழுமியசெல் வத்தினேன் கைக்கொளிக் கிழியென
விரத்திகோ டன்மறுப்ப
விமலநின் பெயராலொர் குளமிங் கமைத்தியென
விட்டது விரைந்தேகினன்
தழுதழுத் தழுதுதொழு தாசர்தந் தாசநஞ்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
• சந்த்ரபுர தலவாசனே. (3)

இத்திரவி யங்கொடும் முனிவர்மு னியற்றியிடு
ஞானப்பிர காசகுளமே
யாமுன் னிசைத்தகுள மினையதிங் கில்லையேல்
யாதுசெய்வா ரீண்டுளோர்
சுத்தசிவ காமியொரு வற்சரத் தொருதினஞ்
சூழ்கரை தவத்தினமர்வாள்
சோதியுந் தேவியுந் தெப்போற் சவங்கொள்வர்
சுற்றிலுந் திருமடமுறும்
நித்தநிய மத்தொழி னிரப்புமூர்த் தீக்கிதரு
நீடுமந் தணரனைவரு
நிகரின்மா கேசுரரு மிவர்கள்பன் னியருமிந்
நீர்நிலையி னின்றுமகலார்
சத்திசிவ காமிகோ யிலுமமைப் பித்ததிவர்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுரதல வாசனே. (4)

நமது முனிவர்,

"எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ."

என்னுந் தாயுமானவர் பாடலுக்கு உதாரணமாக விளங்கியவ ரென்று கூறலாம். இத்தகைய பெரியோர்களின் அருஞ் செயல்களைப் போற்றுவதோடமையாது அவற்றை யாம் பின்பற்றி எமது வாழ்நாளைப் புனிதப்படுத்துவோமாக. அவ ருடைய குரு பூசையையும் நடத்தவேண்டிய ஏற்பாடு செய்தல் உசிதம். சிதம்பரத்திற் சிறப்பாகவும், திருநெல் வேலியில் சாதாரணமாகவும் நடத்தலாம்.

**சபையார் இப்போது செய்யக்கூடிய கருமங்கள்:**

(1) முனிவருடைய சரித்திரத்தை வெளியிடுதல்.

(2) அவருடைய குருபூசைத் தினத்தை (பூச நட்சத் திரம்) மாதந்தோறும் கொண்டாடுதல். சிறிய அளவில் பூசை இயற்றல்.

(3) பங்குனிப் பூசநன்னாளை விசேஷமாகக் கொண் டாடுதல்.

(4) முனிவரது சித்தியாரின் உரையை அச்சிடுதல்.

(5) முனிவர் இயற்றிய நூல்களையெல்லாம் தேடிக் கண்டு காப்பாற்றி வைத்தல். பிறகு சமயம் வாய்க்கும்போது ஒவ்வொன்றாக வெளியிட முயற்சி செய்தல்.

(6) முனிவரின் மடத்தையும் குளத்தையும் (சிதம் பரத்திலுள்ளவை) நல்ல நிலைமைக்குக் கொண்டு வருதல்.

(7) முனிவருடைய சமாதிக்கும் பூசை புரிவித்தல் முதலியன.

# ஞானப்பிரகாச முனிவர் உருவப் பிரதிட்டை.

## சிதம்பரத்தில் ஆனிஉத்திர வைபவம்.

(29 - 6 - 1952.)

திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை எழுதியது.

ஞானப்பிரகாச முனிவர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியில் 375 ஆண்டுகளுக்கு முன் விளங்கிய ஓர் பரம ஞானி. ஆறுமுகநாவலரின் குடும்பத்தைச் சேர்ந்த முன்னோர்களில் ஒருவர். சிவகாருண்ய சிகாமணியாகிய இப்பெரியார் பறங்கியர்களின் கொடுங்கோல் ஆட்சியை நிராகரித்து இந்தியாவிற்குச் சென்று அங்கே துறவுபூண்டவர். சமஸ்கிருதத்திலும் தமிழிலும் புலமையுள்ளவர். தமிழில் சிவஞானசித்தியாருக்கு ஒருரையும் வடமொழியில் பல ஆகம நூல்களும், சிவஞானபோதத்திற்கு (வடமொழி) விருத்தியுரையும் இயற்றியவர். திருவண்ணாமலை மடத்திற் காஷாயம் பெற்றுச் சிதம்பரத்திற் பலகாலம் வசித்து அங்கே சிவகாமியம்மை கோயில் கட்டுதல், ஞானப்பிரகாசக்குளம் வெட்டல் முதலிய பெருந்திருப்பணிச் சிவதர்மங்களில் ஈடுபட்டு அப்புண்ணிய தலத்திலேயே சிவபதமடைந்தவர்.

இப்பெரியாரது உருவத்தை எமது நண்பரும், நாவலர் தரும பரிபாலன கர்த்தருமாகிய முதலியார். க. சுப்பிரமணியம் அவர்கள் தமது சொந்தச் செலவில் புதிதாகச் செய்து

அதனை ஞானப்பிரகாசக் குளத்தின் வடகரையிலுள்ள சேக்கிழார் கோயிலில் சென்ற நந்தன வரு ஆனித் திருவுத்தர நன்னாளாகிய ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு (29-6-52) ஸ்தாபித்துக் கும்பாபிஷேகம் முதலிய ஆகமக் கிரியைகளைப் புரிவித்துத் தினபூசைக்குக் கட்டளை ஏற்படுத்தியுள்ளனர். அவ்விழாவைத் தரிசிக்கப் பல சிவனடியவர்கள் வந்து குழுமித் தேவார பாராயணம் முதலிய சிவ தொண்டாற்றினர். இச்சிவ கைங்கரியத்தைப் புரிந்த நண்பர் **க. சுப்பிரமணியம்** அவர்களின் அன்பின் பெருக்கு மிகவும் பாராட்டத் தக்கது. நாவலர் அறநிலையப் பாதுகாவலராக இவர்கள் வந்த பிறகு பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். நாவலர் அறநிலைகளைப் பாதுகாக்கத்தக்கவர் இவரைப்போல் வேறொருவர் கிடைப்பது அருமையினும் அருமை யென்று யான் உறுதியாகக் கூறுவேன். இவர்களுடைய உண்மைக் குணமும் சிவபக்தியும் போற்றற்பாலன. "போம்போ தருந்துணைபுரிந்த புண்ணியம்" என்பதை நன்கறிந்து அதற்கேற்ப ஒழுகுபவர் இவராவர்.

சிதம்பர தரிசனத்திற்கு வரும் சிவநேயர்கள் தொண்டர்சீர் பரவுவாராகிய சேக்கிழாரையும் சிவகாருண்ய சிவசொரூபியாகிய ஞானப்பிரகாச வள்ளலாரையும் அவரது ஞானப்பிரகாச தீர்த்தத்தையும் தரிசித்தல் பெரும் புண்ணியமாம்.

**"எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுந் தபோதனர்கள்**
**செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ."**

—தாயுமானவர்.

திருச்சிற்றம்பலம்.

# பிரகடன பத்திரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கந்தபுராணம் செய்யுள் | 8 | 0 | 0 |
| கந்தபுராணம் வசனம் | 5 | 0 | 0 |
| பெரியபுராணம் சூசனத்தோடு | 5 | 0 | 0 |
| பெரியபுராண வசனம் | 2 | 8 | 0 |
| திருவள்ளுவர் பரிமேலழகருரை | 5 | 0 | 0 |
| திருவிளையாடற் புராணம் | 3 | 8 | 0 |
| திருவிளையாடற்புராண வசனம் | 2 | 0 | 0 |
| நாவலர் பிரபந்தத்திரட்டு | 2 | 0 | 0 |
| அருட்பா—இது அகத்தியர் தேவாரத்திரட்டும் திருவாசகமும் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பெரியபுராணச் செய்யுட்டிரட்டும் அடங்கியது. | 1 | 12 | 0 |
| ஆறுமுகநாவலர் சரித்திரம் | 1 | 4 | 0 |
| கோயிற்புராணவுரை | 1 | 4 | 0 |
| சைவசமயநெறியுரை | 1 | 4 | 0 |
| பதினொராந்திருமுறை | 1 | 4 | 0 |
| திருவாசகம் | 1 | 4 | 0 |
| திருமுருகாற்றுப்படையுரை | 0 | 5 | 0 |
| சிதம்பரமான்மியம் | 0 | 3 | 0 |
| சிதம்பரமும்மணிக்கோவை | 0 | 3 | 0 |
| சிவாலயதரிசனவிதி | 0 | 3 | 0 |
| நித்தியகருமவிதி | 0 | 2 | 0 |
| முதற்சைவவினாவிடை | 0 | 3 | 0 |
| இரண்டாஞ்சைவவினாவிடை | 0 | 10 | 0 |


**ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்,**

**வித்தியாநுபாலனயந்திரசாலை,**

நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை.